# இலங்கையில் முருக வழிபாடு: ஒரு வரலாற்றியல் நோக்கு

## (கி.பி.15ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியை அடிப்படையாகக் கொண்டது)


கலாநிதி வ.குணபாலசிங்கம்

சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை

கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

E- Mail: guthse2011@gmail.com



## *ஆய்வுச் சுருக்கம்*

*இலங்கையிலே நிலவி வருகின்ற வழிபாட்டு மரபுகளில் முருக வழிபாடு பிரசித்தானது. இவ்வழிபாடு புராதன காலத்திலிருந்து சமூக வரலாற்றுடனும், சூழலியல் சார் பண்பாடுகளுடனும் இணைவு பெற்று வளர்ந்து வந்துள்ளது. பண்டைக்காலம் முதலாகத் தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான அரசியல், வணிக, பண்பாட்டு உறவுகளால் முருக வழிபாடு இங்கு வளர்ச்சியடைந்திருப்பினும், இலங்கைக்கே உரித்தான சில வழிபாட்டம்சங்களும் இதில் காணப்படுகின்றன. இலங்கையில் முருக வழிபாட்டின் தொன்மையைப் பொம்பரிப்பு, கந்தரோடை ஆகிய இடங்களிற் கிடைத்த வேல், காவடிச் செதில்கள் ஆகிய சின்னங்களால் உறுதிப்படுத்த முடிகின்றது. கி.பி.2ஆம் நூற்றாண்டிற்குரிய நாணயங்கள் அக்குறுகொட, புளியங்குளம், கந்தரோடை ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. அவற்றிலே முருக வழிபாட்டின் புராதனம் தெளிவாகின்றது. கி.பி.13ஆம் நூற்றாண்டுக்குரிய வில்லூன்றிக் கந்தசுவாமி கோயிலிற் கிடைத் கல்வெட்டு கிழக்கிலங்கை முருக வழிபாடு பற்றி அறியக் கூடிய புராதன சான்றாதாரமாகும். பொலன்னறுவையிற் கிடைத்த சுப்பிரமண்யருக்கான கோயிற் சிதைவும், வெண்கலப்படிமமும் முருக வழிபாட்டின் வளர்ச்சியைக் காட்டுகின்றன. யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் ஆட்சிக்காலப் பகுதியில் வெளியிடப்பட்ட நாணயங்களில் நல்லூர் கந்தசுவாமி கோயிலின் சிற்றுருவம் பொறிக்கப்பட்டுள்ளது. மேலும் லங்காதிலக, கடலாதெனிய விகாரைகளில் உள்ள குமாரக்கடவுளுக்கானத் தனிக் கோட்டம் பௌத்தசமய மரபில் முருக வழிபாடு செலுத்திய செல்வாக்கைப் புலப்படுத்துகின்றது. இலங்கையின் முருக வழிபாட்டில் கதிர்காமத்திற்குரிய இடம் குறிப்பிடத்தக்கது. இலங்கையின் முருகவழிபாட்டில் கிழக்கிலங்கையிலே பிரசித்தமுடையதாக விளங்கும் திருப்படைக் கோயில்களுக்கு முக்கியத்துவம் உண்டு. முருக வழிபாடுகள் காலம் காலமாக இலங்கை மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருவதனால் அவ்வழிபாட்டின் தொன்மையையும், தனித்துவங்களையும் அடையாளப்படுத்துவதும், கிழக்கிலங்கையிலுள்ள முருகன் கோயில்களில் இடம் பெறும் வழிபாடுகளுக்கிடையிலான பொதுமைகளையும், தனித்துவங்களையும் இனங்காண்பதும், இவ்வழிபாடுகளுடன் தொடர்பான பத்ததிகளின் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்துவதும், கிழக்கிலங்கையில் முருக வழிபாடு தொடர்பாக நிலவும் வாய்மொழிக் கதைகளில் உள்ள வரலாற்று மூலங்களை இனங்காண்பதுவும், முருக வழிபாட்டு முறைமைகளில் சமூக வழமைகள் இணைந்து கொண்டதன் பின்புலத்தினை மதிப்பிடுவதும் இவ்வாய்வின் நோக்கங்களாகும். இலங்கையில் தனித்துவமான முருக வழிபாட்டு முறைமைகளை அடையாளங் காண்பதில் உள்ள இடர்ப்பாடுகளே ஆய்வின் பிரதான பிரச்சினையாகவுள்ளது. இவ்வாய்வு வரலாற்று ஆய்வுமுறை, ஒப்பீட்டு ஆய்வுமுறை, விபரண ஆய்வுமுறையிலும் நிகழ்த்தப்பட்டுள்ளது. இலங்கையின் முருக வழிபாட்டு முறைகளே ஆய்வு எல்லையாகும். இவ்வாய்வானது*

*சிறப்பாக இலங்கையிலுள்ள முருகவழிபாட்டின் தனித்துவங்களை வெளிக்கொணர்வதனால் இலங்கையில் நிலவுகின்ற ஏனைய தெய்வ வழிபாடுகளின் தனித்துவங்களை ஆராய முற்படுவோருக்கு முன்னோடியாக அமைவதுடன், மிகப்பழமையான தெய்வ நம்பிக்கைகளையும் அவற்றுடன் தொடர்புடைய வழிபாடுகளையும் பின்பற்றுகின்ற சமுதாயங்களின் வரலாறு பற்றி ஆராய்வதற்கு வழிவகுக்கும்.*

***திறவுச் சொற்கள்:*** *இலங்கை, முருக வழிபாடு, தொல்லியற் சின்னங்கள்,*

## அறிமுகம்

இலங்கையில் நிலைபெற்று விளங்குகின்ற சமய மரபுகளில் சைவசமயமே மிகப்பழமையானது. (சி.பத்மநாதன், 2000, ப.03) பண்டைக் காலம் முதலாக இலங்கையில் சைவ நெறி மேன்மை பெற்று விளங்கியதனால் அதனைச் 'சிவபூமி' என்று சொல்லும் வழக்கம் தமிழகப் பக்தி இலக்கிய மரபில் உண்டு. (திருமந்திரம், பாடல்: 2747) இலங்கையிலுள்ள சைவ சமய மரபுகள், இந்தியத் துணைக் கண்டத்திற்கும் இலங்கைக்கும் இடையில் அமைந்த நெருங்கிய தொடர்புகளால் வலுப்பெற்று வந்தன. தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்கும் ஆதிகாலம் முதலாக இருந்து வந்த வாணிப உறவுகள் காரணமாகத் தமிழகத்தில் ஏற்பட்ட சமய, பண்பாட்டு வளர்ச்சிகளும், மாற்றங்களும் இலங்கையில் மிகுந்த செல்வாக்கினை ஏற்படுத்தியிருந்தாலும், இலங்கைத் தமிழருக்கெனத் தனித்துவமான பண்பாடும், சமய மரபுகளும் இங்கு பண்டுதொட்டு நிலவி வந்திருக்கின்றன என்பதனையும் அறியமுடிகின்றது.

இலங்கையில் ஆட்சி புரிந்த அரசர்களின் ஆதரவுடன் இங்கிருந்த சமயநெறிகள் வளர்ச்சியடைந்து வந்துள்ளன. இதனை இலங்கையின் வரலாற்றுக்காலம் முதலாக அறியக்கிடைக்கின்றது. அனுராதபுரக்காலம் தொடக்கம் ஆட்சியுரிமை பெற்ற அரசர்கள், சைவ சமயத்திற்கும் அதனுடைய பண்பாட்டிற்கும் ஆதரவு புரிந்துள்ளனர். பிராமணர்களுக்கு மன்னர்களால் நன்கொடைகள் வழங்கப்பட்டுள்ளன. சைவாலயங்கள் பலவற்றை அரசர்கள் அமைத்துள்ளார்கள். அத்துடன் பௌத்த சமயத்தில் அபிமானங் கொண்ட அரசர்களும், ஏனையோரும் கூட சில சமயங்களில் சைவாலயங்களுக்கும் சென்று வழிபாடு செய்ததோடு, விழாக்களிலும் கலந்துகொண்டுள்ளனர். (சி.பத்மநாதன், மு.கு.நூ, ப.38)

பொலன்னறுவைக் காலம், இலங்கையின் சைவசமய வரலாற்றிலே ஒரு சிறப்புமிக்க காலமாக விளங்குகின்றது. இராசதானியிலே சைவசமயப்பண்பாட்டின் செல்வாக்கு மேலும் விருத்தி பெற்றது. மன்னர்கள் சிலரும் அவர்களைச் சார்ந்தோர் பலரும் சைவசமயம் சார்ந்தோராகக் காணப்பட்டனர். அரசியலிலும் நிருவாக முறைகளிலும் சைவ மரபுகளின் செல்வாக்கு பெருமளவில் ஏற்பட்டது. பொலன்னறுவை இரசதானியிலே பல இந்து சமயக் கோயில்கள் கட்டப்பெற்றன. அவற்றிற் சில சோழராட்சிக் காலத்தில் கட்டப்பெற்றவை. ஏனையவை அதற்குப் பின்பு கட்டப்பெற்றவை. இக்கோயில்களுடன் வெண்கலப்படிமங்களின் வளர்ச்சியும் குறிப்பிடத்தகுந்தது. (சி.பத்மநாதன், மு.கு.நூ, ப.359)

இலங்கையில் குறிப்பாக வட இலங்கையில் ஆரியச்சக்கரவர்த்திகள் என்னும் தமிழ் மன்னர்கள் ஆட்சி புரிந்தவேளையில் அங்கிருந்த சைவ சமயம் மேலும் வலுப்பெறுவதாயிற்று. (ப.புஷ்பரெட்ணம், 2002, ப.32) கோயில்களையும், அவற்றின் வழிபாடுகளையும் சிறந்த முறையில் பரிபாலனம் செய்தனர். கோயில் சார்பாகவும், ஆட்சிச்சிறப்புச் சார்பாகவும் நினைவுச் சின்னங்களான நாணயங்களை வெளியிட்டும், கல்வெட்டுக்களில் பொறித்தும் தமது சிறப்பு மிகுந்த ஆட்சியை ஆவணப்படுத்தினர்.

இலங்கையின் சைவசமய வளர்ச்சியில் கோட்டை இராசதானிக்குப் பொறுப்பாக்கப்பட்டிருந்த அரசர்கள் தமது ஆதரவினை நல்கியுள்ளனர். கோயில்களைக் கட்டுவதற்கும் அங்கு வழிபாடுகளை

சீர்படுத்துவதற்கும் தானங்களை வழங்கியுள்ளனர். இதனை சமய ஒறுப்பின்றி செவ்வனே நிறைவேற்றியுள்ளமை மனங்கொள்ளத்தக்கது. ஆறாம் விஜயபாகு, ஆறாம் பராக்கிரமபாகு போன்ற மன்னர்களின் அரசாட்சிக் காலத்தில் சைவசமயம் சிறந்து விளங்கியது எனலாம். (C.S.Navaretnam, 1964, P105)

பண்டு தொட்டு சைவசமயம் சிறந்து விளங்கிய பிராந்தியங்களில் கிழக்கிலங்கை பிரத்தியேகமான பிரதேசமாகும். வீரசைவ மரபுளாலும் ஏனைய வழிபாட்டு முறைகளாலும் சிறப்படைந்த சைவசமயம் அப்பிராந்தியத்திற் செல்வாக்கு மிகுந்த சமயமாக காணப்பட்டது. மன்னர்களின் மானியங்களாலும், வன்னிமைகளின் திருப்பணிகளாலும் இங்கிருந்த சைவ சமயம் வளம்பெற்றது. கோயில் உற்பத்தியிலும், அதன் பராமரிப்பிலும் மன்னர்களும் ஏனையோரும் ஊக்கம் செலுத்தினர். கோயிலில் பணிபுரிவதற்கும், ஏனைய கடமைகளைச் செய்வதற்கும் தொழும்பர்கள் நியமிக்கப் பட்டார்கள். இதனால் இங்கு வழக்கிலிருந்த சைவநெறி மிகுந்த சிறப்புடன் விளங்கியது.

இலங்கையிற் சைவநெறியில் விஷ்ணு வழிபாடும், முருக வழிபாடும், அம்மன் வழிபாடும், ஏனைய வழிபாடுகளும் கலந்துள்ளமை அதன் தனித்துவத்தை மேலும் வலுப்படுத்துகின்றது. இலங்கையின் சைவ நெறியிற் குறிப்பிடத்தக்க இடத்தினை முருக வழிபாடு எய்தியிருந்தமையை அறியக்கிடைக்கின்றது. இவ்வகையில் இலங்கையிலே பண்டு தொட்டு வழக்கிலிருந்து வந்த முருக வழிபாட்டின் பரிணாம வளர்ச்சியினையும், அதன் பிரதான அம்சங்களையும், அவற்றாற் சமுதாயத்தில் ஏற்பட்ட செல்வாக்கினையும் அறிந்து கொள்ள முடிகின்றது. இதனைச் சாசனங்கள், நாணயங்கள், குறியீட்டுப் பொருட்கள், கோயிற் சிதைவுகள், இலக்கியங்கள், தோத்திரப்பாடல்கள், வாய்மொழி மரபுக் கதைகள் முதலியவற்றின் மூலம் உறுதிப்படுத்த முடியும். இவ்வரலாற்று மூலங்கள் பிரதிபலிக்கும் முருக வழிபாட்டு முறைகளைக் கால நிர்ணயத்தை அடிப்படையாக வைத்து நோக்கப்படுகின்றது. ஆய்வுப்பரப்பினைக் கருத்திற்கொண்டு இக்காலநிர்ணயம் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டு வரைக்கும் வரையறுக்கப்பட்டுள்ளது.

**கி.பி.5ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி**

இலங்கையிலே கி.பி.5ஆம் நூற்றாண்டு வரைக்குமான காலப்பகுதியில் நிலவிய முருக வழிபாடு தொடர்பான சான்றுகளைக் கல்வெட்டுக்களிலும், நாணயங்களிலும் கண்டு கொள்ளலாம். வடஇந்தியாவில் குஷாணர், யௌதேய நாணயங்களிற் குமாரக்கடவுளை விஸாக, மகாசேன, ஸ்கந்த என்று குறிப்பிட்டுள்ளார்கள். (ப.புஷ்பரெட்ணம், மு.கு.ஆ.க, ப.31) இந்தப்பெயர்கள் பிராகிருத மொழியாகி இலங்கையில் பரவிய பொழுது இங்கு பலரின் இயற்பெயர்களாகிவிட்டன என்பதற்குப் பிராமிக்கல்வெட்டுக்கள் சான்றுகளாகும். பெரிய புளியங்குளத்திற் கிடைத்த கி.மு.2ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டு ஒன்றில் இதில் ‘விசாக’ என்னும் பெயர் இடம்பெற்றுள்ளது. (மேலது) இது தமிழ் வணிகருக்குரிய பெயராக இனங்காணப்பட்டுள்ளது. (மேலது) பெரிய புளியங்குளத்துச் சாசனம் இரண்டிற் குறிப்பிடப்படும் ‘விசாக’, என்ற பெயரையும், அம்பாந்தோட்டையிற் கிடைத்தப் பிராமிச்சாசனங்கள் கூறும் ‘குமார’‘வேலு’ என்ற பெயர்களும் முருக வழிபாட்டுடன் தொடர்புபடுத்தப்படுகின்றது. (ந.சந்தனா, 1994, ப.12)

காலத்தால் மிகப் பழைய பெருங்கற்காலச் சின்னங்களில் முருக வழிபாட்டிற்குரிய தடயங்கள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் கி.மு முதலாம் நூற்றாண்டின் பெருங்கற்கால பண்பாட்டிற்குரிய ஆதிச்சநல்லூரின் தாழிக்காட்டில் முருக வழிபாட்டுடன் தொடர்புடைய சேவற் சின்னம், வேல், காவடிக்குரிய குறியீட்டுச் சின்னங்கள் முதலியன கண்டெடுக்கப்பட்டுள்ளன. (சி.க.சிற்றம்பலம், 1996, ப.182) இதையொத்த சின்னங்கள் பல இலங்கையின் புத்தளம்

மாவட்டத்திலுள்ள பொம்பரிப்பு, வளவை, கங்கைப் பள்ளத்தாக்கு முதலிய இடங்களிலும் கிடைத்துள்ளன. (மேலது) இதிற் குறிப்பிடத்தக்க சான்றாகக்கொள்ளக் கூடியது இரும்பினாலான வேலாயுதம் ஆகும். அத்துடன் யாழ்ப்பாணம் கந்தரோடையில் அகழ்வாராய்ச்சியில் கிடைத்த வேல் சின்னமும் பொம்பரிப்பில் கிடைத்த வேல்சின்னத்தை ஒத்ததாகக் காணப்படுகின்றது. (மேலது) இச்சின்னங்களை ஒருமித்து நோக்குகையில் இலங்கையில் முருக வழிபாடு மிகத் தொன்மைக் காலத்திலே நிலவியது என்பது கவனத்திற்குரியது.

தென்னிலங்கையில் அக்குறு கொட என்ற இடத்தில் கிடைத்த கி.பி இரண்டாம் நூற்றாண்டு காலத்துக்கு முற்பட்ட நாணயத்தின் இரு புறங்களில் முன்புறத்தில் மயிலின் உருவமும், பின்புறத்தில் தமிழ்ப் பிராமி எழுத்தில் 'மகாசாத்தன்' என்ற பெயரும் காணப்படுகின்றது. (O.Bopearachchi, 1999, P.54) அதே காலப்பகுதியில் வடஇலங்கையின் கந்தரோடையிற் கிடைத்த இன்னும் ஒரு நாணயத்தில் முன்புறத்தில் 'ஸ்ரீவத்ஸாவும்', பின்புறத்தில் மயில் சின்னத்துடன் தமிழ்ப் பிராமி எழுத்தில் உதி(ஹ)பன் என்ற பெயரும் காணப்படுகின்றது. (ப.புஷ்பரெட்ணம், மு.கு.ஆ.க, ப.32) எனவே நாணயங்களில் இடம்பெற்றுள்ள மயிற் சின்னம் அவற்றை வெளியிட்டுப் புழக்கத்திற்குக் கொண்டு வந்தவர்கள் முருக வணக்கத்தில் ஈடுபாடு கொண்டவர்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

கி.பி. 5ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட பாளி இலக்கியங்களிலும், பிராமிச் சாசனங்களிலும் இக்கால சமுதாயத்திற் செல்வாக்குப் பெற்றிருந்த பலதரப்பட்ட மக்களுடைய பெயர்கள் காணப்படுகின்றன. (நேர்காணல், சி.பத்மநாதன், 12.08.2017))எந்த சமுதாயத்திலும் ஆட்பெயர்கள் சில அடிப்படைக் கோட்பாடுகளைக் கொண்டே பெயரிடப்படுகின்றன. அப்பெயர்களுக்கும் அவை பிரதிபலிக்கும் சமய நம்பிக்கைகளுக்கும் இடையில் தொடர்புகளும் உள்ளன. (Y.Subbarayalu, 1991, P.P 41-48)

அனுராதபுரக் காலத்துச் சிங்கள இலக்கியங்களில் 'மகாகந்தன்' என்ற தமிழ்ப் பிரதானி மகாகந்த விகாரத்தைக் கட்டினான் எனக்கூறப்படுகின்றது. (சி.பத்மநாதன், 2006, ப.37) அத்துடன் குமார கணத்துப் பேரூராரின் சாசனம் பற்றியும் கூறப்படுகின்றது. (மேலது, ப.51) இதில் குமாரகணம் என்பது குமாரக்கடவுளின் கோயில்களைப் பரிபாலனம் செய்யும் குழு எனக்கூறப்பட்டுள்ளது. சி.பத்மநாதன் இவை பற்றிக் கூறுமிடத்து,'குமாரகணம் என்பது மணிக்கிராமம் என்பதைப் போல ஒரு வணிகர் கணத்தின் பேராதலும் கூடும். அவர்கள் அதிகாரம் பெற்றிருந்த ஊர் அவர்களின் கணப்பெயரால் வழங்கியதென்றுங் கருதலாம்'( சி.பத்மநாதன், மு.கு.நூ, ப.51) எனக்கூறுகின்றார்.

குப்தர் கால சமய நெறிகளில் முருக வழிபாட்டின் முக்கியத்துவத்தினை அக்கால இலக்கியங்களும், நாணயங்களும் பிரதிபலித்துக் காட்டுகின்றன. அக்காலத்தில் இவ்வழிபாடு அரச ஆதரவினைப் பெற்று வளர்ச்சியடைந்து வந்துள்ளது. குப்தர் கால மன்னர்கள் முருகனுக்குரிய பெயர்களான குமாரன்,(குமாரகுப்தன்) ஸ்கந்தன்(ஸ்கந்தகுப்தன்) ஆகியவற்றைத் தமது பெயர்களாக மாற்றிக் கொண்டமைக்கு இக்காலத்தைய முருக வழிபாட்டு நெறியின் செல்வாக்கே காரணம் எனலாம். எனவே அனுராதபுரத்துச் சிங்கள இலக்கியங்களில் பயிலப்பட்டிருக்கும் மகாகந்தன், குமாரகணம் என்னும் பெயர்களில் கந்தன், குமார என்பது முருகனுக்குரிய பெயர்கள். அனுராதபுர காலத்து சைவ மரபில் முருக வழிபாடு செல்வாக்குப் பெற்றமையின் காரணமாக, அக்காலத்துச் சமுதாயத்தினர் தமது பெயர்களுடனும், தமது இனக்குழுமத்தின் பெயர்களுடனும் முருகனின் பெயர்களையும் இணைத்துக் கொண்டுள்ளமை ஆச்சரியத்திற்குரியதன்று.

இலங்கையிலே முருக வழிபாடு பற்றிய முழுமை பெற்ற சான்றாதாரங்கள் பல இக்காலத்திற்குரியனவாகும்.
இலக்கியங்களும், சாசனங்களும், பிற சான்றுகளும் இக்கால முருக வழிபாட்டை மையப்படுத்தித் தோற்றம் பெற்றமை குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்றாகும்.

முருக வழிபாட்டுப் பூசாரி 'வேலன்' என அழைக்கப்படுவார். முருகனின் ஆயுதமும் வேல் ஆகும். பாளி மொழியின் பிராமி எழுத்துக்கள் வேலன் என்பதை 'வேல''எனக்கூறுகின்றன. அனுராதபுரம், அம்பாறை, மாத்தளை ஆகிய இடங்களில் இடம்பெற்ற அகழ்வாய்வுகளிற் கிடைத்த கல்வெட்டுக்களில் 'வேல' என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. மாத்தளை மாவட்டத்திலுள்ள நிலகம் என்ற இடத்திற் கிடைக்கப் பெற்ற கல்வெட்டில் 'கமிக வேலன்" குகை (சி.க.சிற்றம்பலம், மு.கு.நூ,பக்.186-187) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

### கி.பி.10ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி

யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் ஆட்சிக் காலத்தில் முதலாமவராகக் கருதத் தக்க மன்னன் உக்கிரசிங்கன் ஆவான்.(க.கணபதிப்பிள்ளை, 2003, பக்.22-28) (கி.பி 831 – கி.பி 851) இவனது ஆட்சிக் காலம் பற்றியும், அவனது ஆட்சிக் காலத்தைய சமய நெறிகள் பற்றியும் யாழ்ப்பாண வைபவமாலை, வையாபாடல், கைலாயமாலை முதலிய நூல்கள் கூறுகின்றன.

உக்கிரசிங்கனது குலதெய்வம் முருகக் கடவுள் என யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது. (யாழ்ப்பாண வைபவமாலை, ப.06)அத்துடன் வையாபாடல்,

**" பொன்னகர் நிகருங் கதிரையம் பதியிற்**

**போராயன் மகவினை வணங்கிப்**

**பின்னருக் கிரம சிங்க சேனன்றன்**

**பெண்ணென விருந்தனளதற்பின்"** (வையாபாடல்: 17)

என உக்கிரசிங்கன் முருக பக்தன் என்பதனை உறுதிப்படுத்துகின்றது.க இத்துடன் அவன் கதிரமலை என அழைக்கத்தக்க முருகன் கோயிலையும் கந்தரோடையிற் கட்டினான் என்னும் செய்தியும் மேற்குறித்த பாடல் வரிகள் ஊடாக அறியக்கிடைக்கின்றது.

சோழ இளவரசியாகிய மாருதப் புரவீகவல்லியைத் திருமணம் செய்த பின்னர் மாவிட்டபுரக் கந்தசுவாமி கோயிலைக் கட்டி அதில் தாபனம் பண்ணுவதற்காகப் பொருட்களையும், முருகன், வள்ளி, தெய்வயானை முதலிய சில விக்கிரகங்களையும் தமிழகத்தில் இருந்து வரவழைத்தான் என்னும் ஐதிகக் குறிப்பும் யாழ்ப்பாண வைபவமாலையில் பயின்று வந்திருக்கின்றது. (சி.க.சிற்றம்பலம், 1993, பக். 529-530)

### கி.பி.15ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி

சோழராட்சிக் காலப்பகுதியில் குறிப்பாக இராஜேந்திர சோழன் ஆட்சி ஆண்டுகளில் மிகுந்த செல்வப் புகழுக்குரிய சாதனைகளில்,'வடக்கே கங்கை முதல் தெற்கே கதிர்காமம் வரையிலும் சோழர் சைனியம் சென்று மீண்டது' (கு.சபாநாதன், 2007, ப.16) என்னும் குறிப்பில் கதிர்காமம் சோழர்களின் ஆட்சி எல்லையாக இருந்தமை பற்றி அறியக் கூடியதாகவுள்ளது. அக்காலத்தில் கதிர்காம முருகன் கோயில் சோழர் பராமரிப்பில் இருந்திருக்கலாம் எனக்கருத இடமுண்டு.

இலங்கையிலுள்ள முருக வழிபாட்டுத் தலங்களில் பழமையானதும், புகழ்

பெற்றதுமான தலமாகக் கருதத்தக்கது கதிர்காமம் முருகன் கோயிலாகும். கதிர் என்றால் ஒளிக் கற்றை என்றும், காமம் என்பதற்கு விருப்பம், ஆசை என்றும் பொருள் கொள்ளப்படுகின்றது. (மேலது, ப.13) எனவே ஒளி நிறைந்த அக்கடவுள் எல்லோரது விருப்பத்துக்கும் உகந்தவன் எனலாம். சங்க இலக்கியங்களில் முருகன் சூரியனுடன் தொடர்புபடுத்தப்பட்டதை முன்பு பார்த்தோம். கதிர், காமம் என்ற இரண்டு பதங்களும் சேர்ந்து கதிர்காமம் ஆனது எனக்கொள்ள இடமுண்டு. கதிர்காமம் என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்திப் பாடியவர் அருணகிரிநாதர். அவர் தமது திருப்புகழில் 'கதிராமத்தி லுறைவோனே' (திருப்புகழ், 426: 11-12) என்றும், கந்தசட்டிக் கவசத்தில் 'கதிர்காமத்துறை கதிர் வேல் முருகா' (கந்தசஷ்டி கவசம், வரி: 168) என்றும் பாடியுள்ளமையும், தட்சிணகைலாய புராணம் 'கந்த வெற்பு'எனக் கூறுகின்றமையும் ஈண்டு நோக்கத்தக்கதாகும்.

கதிர்காம முருகன் கோயில் பற்றிய மரபு வழிக் கதையொன்றில், சிங்கள மன்னனான துட்டகைமுனு தமிழ் மன்னன் எல்லாளன் மீது படையெடுத்து அவனை வென்று அனுராதபுர இராசதானியைக் கைப்பற்றினான். (சி.க.சிற்றம்பலம், மு.கு.நூ, ப.202) இவ்வாட்சியுரிமை கிடைப்பதற்குத் தமக்குக் கதிர்காம முருகனே அருள்புரிந்தான் எனக்கருதி அங்கிருந்த பழைய கோயிலை இடித்து புதிய கோயிலைக் கட்டுவித்தான் எனக்கூறப்படுகின்றது. இக்கதை சான்றாதாரமற்ற கதையாகும். (நேர்காணல், சி.பத்மநாதன், 12.08.2017) கதிர்காம முருகன் கோயில் பற்றிய குறிப்பு ஒன்றை பதினாறாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பௌத்த நூலான 'ஜினகாலமாலி' என்னும் நூலிற் காணமுடிகின்றது. (மேலது)

இலங்கையின் முருக வழிபாட்டின் தொன்மைக்கு வெண்கலப் படிமங்களும் சான்று பகர்கின்றன. அவற்றுள் திருக்கோணேஸ்வரத்தில் இருந்தும், திருக்கேதீஸ்வரத்தில் இருந்தும் கிடைக்கப்பெற்ற சோமாஸ்கந்த மூர்த்தியின் படிமங்கள் பிரதானமானதாகும். திருக்கேதீஸ்வரத்தில் கிடைத்த படிமம் கிபி.8ஆம் நூற்றாண்டுக்குரிய கலை மரபுகளைக் கொண்டுள்ளது. (செ.கிருஷ்ணராசா, 2012) இலங்கையின் படிமக்கலை வரலாற்றில் திருக்கேதீஸ்வரப் படிமம் காலத்தால் முற்பட்டது. திருகோணஸ்வரத்தில் இருந்து கிடைத்த சோமாஸ்கந்த வெண்கலப் படிமமானது வெண்கலத்தினால் ஆக்கப் பெற்றுள்ளது. (மேலது, பக். 694-695)

இலங்கையிலே கி.பி. 1200 – கி.பி. 1650 ஆகிய காலப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பெருங் கோயில்களிற் கண்டி மாவட்டத்திலுள்ள லங்காதிலக, கடலாதெனிய ஆகிய இரண்டுமே மிகுதியாகவுள்ளன. அவை கம்பளை இராசதானிக் காலத்தில் கி.பி. 1334 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டன. இக்காலக் கட்டட நிர்மாணங்கள் தென்னிந்திய கட்டட மரபுகளை தழுவியதாகக் காணப்படுகின்றன. கம்பளைக்கு அண்மித்துக் காணப்படும் இருவேறு இடங்களில் ஒரே காலப்பகுதியில் நிறுவப்பட்ட லங்காதிலக, கடலாதெனிய விகாரங்கள் இக்காலக் கட்டடங்களுள் தனிச்சிறப்பைப் பெறுவன. லங்காதிலக விகாரம் நான்கு தளக்கட்டடமாக அமைக்கப்பட்டுள்ளது. அதில் மரபு வழியான பௌத்தக்கட்டடக்கலையின் அம்சங்களோடு இந்துக்கோயில்களின் அம்சங்களும் கலப்புற்றன. (சி.பத்மநாதன், 2013, ப.179)

மத்திய காலத்தில் இலங்கையின் காவலர்களாகக் கொள்ளப்பட்ட தேவர் நால்வரின் வழிபாடு பௌத்த சமயத்தில் ஒரு பிரதானமான அம்சமாகியது. உபுல்வன், சமன், விபீஷணன்,ஸ்கந்த(குமார) ஆகிய நால்வரையும் காவல் தெய்வங்களாகக் கொண்டனர். பௌத்த கோயில்களில் அவர்களின் படிமங்களைத் தாபனம் பண்ணி அவற்றை வழிபட்டனர். லங்காதிலக விகாரையில் அவற்றுக்குத்தனியான கோட்டங்கள் அமைக்கப்பெற்று அவை கோயிற்கட்டுமானத்தின் பகுதிகளாயிருந்தன. (மேலது ப.186)

லங்காதிலக விகாரத்தின் உள்ளே வழிபாட்டுக்குரிய முக்கிய சிலையாக புத்தர் சிலை இருப்பதுடன், வெளிப்புறச் சுவர்களின் மாடக்குழி ஒன்றில் குமாரக்கடவுளின் படிமம் வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், கம்பளைக் கால பௌத்த மரபில் குமாரக்கடவுள் காவல் தெய்வமாக வணங்கப்பட்டுள்ளமையை அறியமுடிகின்றது. (செ.கிருஷ்ணராசா, மு.கு.நூ, ப.640)

இலங்கையின் முருக வழிபாடு பற்றிய ஆய்வில் தொல்பொருட் சின்னங்களுக்கு முக்கியத்துவம் உண்டு. அவற்றில் பழமையான கோயிற்றூண்களும் அடங்குகின்றன. யாழ்ப்பாணத்தில் இணுவில் கந்தசுவாமி கோயிலில் பல்லவர் கலைப்பாணியிலான எட்டுத்தூண்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இத்தூண்களை அங்கு புராதனமான ஒரு கந்தசுவாமி கோயில் இருந்தமைக்குரிய பழம்பொருட் சின்னமாகக் கொள்ள முடியும். (ஆய்வாளர் அவதானம், இணுவில், 22.03.2017) இலங்கையிலே சோழர், பாண்டியர், கலிங்கர் முதலானோரின் ஆட்சிக் காலப்பகுதியில், சோழ மன்னர்களின் ஆட்சியில் மிகுந்த செல்வாக்குடன் நிலவிய இராசதானி பொலன்னறுவையாகும். தமிழ் மன்னர் ஆட்சியில் இப்பிரதேசத்தில் தமிழர்கள் செறிந்து வாழ்ந்தனர். அத்துடன் சைவக் கோயில்கள் பலவும் சிறப்பு நிலையிற் காணப்பட்டன. இக்கோயில்களின் கருவறையில் வைத்து வழிபடுவதற்கும், உற்சவ மூர்த்திகளாக அலங்கரித்து வீதியுலா வருவதற்கும் வெண்கலப்படிமங்கள் உபயோகிக்கப்பட்டன.

இலங்கையிலே அனுராதபுரம் இராசதானியாக இருந்த காலம் முதலாக வெண்கலப் படிமங்களை வார்க்கும் கலை வளர்ச்சி பெற்று வந்துள்ளது. (சி.பத்மநாதன், 2003, ப.482) இலங்கையிற் கிடைத்துள்ள வெண்கலப்படிமங்களிற் பெரும்பாலனவை பொலன்னறுவைக் காலத்திற்குரியனவாகும். பொலன்னறுவைக் காலத்து வெண்கலப்படிமங்கள் பெரும்பாலும் சோழர் கலைப்பாணியின் அம்சங்களைக் கொண்டுள்ளன. (மேலது, ப.482) 1960 ஆம் ஆண்டு தொல்பொருள் திணைக்கள ஆணையாளராக C.E.கொடகும்புர என்பவர் பதவி வகித்த காலத்தில் பொலன்னறுவையின் ஐந்தாம் சிவதேவாலயத்திற்குத் தென்புறமாக இருந்த ஒரு குடத்தில் எட்டு வெண்கலப்படிமங்களும் வேறுபல பொருட்களும் கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் குமாரக்கடவுளின் திருவுருவமும் ஒன்றாகும். (மேலது, ப.151) பொலன்னறுவைக் கால சைவமரபில் முருக வணக்கம் இருந்துள்ளது என்பதனை இவ்வெண்கலப் படிமம் காட்டுகின்றது எனலாம்.

பொலன்னறுவை, சோழ மன்னர்களின் இராசதானியாக விளங்கிய காலப்பகுதியிலே பிரசித்தமுடைய பல சிவாலயங்களைக் கட்டினார்கள். குறிப்பாக முதலாம், மூன்றாம், நான்காம் சிவாலயங்களில் பரிவார மூர்த்திகளுக்கும் கோயில்கள் எழுப்பபட்டிருந்தன. மேற்குறித்த சிவாலயங்களின் வடமேற்குப் புறத்தில் சுப்பிரமணியருக்கான கோயில் கட்டப்பட்டிருந்தது (நேர்காணல், சி.பத்மநாதன், 12.08.2017) அத்துடன் அங்கு கண்டெடுக்கப்பட்ட பழம்பொருட்களில் சுப்பிரமணியக் கடவுளின் விக்கிரகம் ஒன்றும் கிடைத்துள்ளது.

திருகோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி கோயிலிற் கிடைத்துள்ள கி.பி 13ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டு ஒன்றில் இலங்கையின் அக்கால முருக வழிபாடு பற்றிய விபரங்களைக் காணமுடிகின்றது. மன்னன் ஒருவன் போரில் வென்றமைக்கு நன்றி செலுத்தும் சாசனமாக இது விளங்குகின்றது. இச்சாசனத்தில்,

**“ வென்றி மலர்பொதிவேல் கையருள வேந்தர்க்கு**

**நன்றிமுக மண்டபத்தே நாட்டினானொ(ன்)றோ**

**பொற்கரசை மாமதுரைப் புத்தபிய வைத்த வீரன்**

**கற்கால திருநிலைவான் காப்பு”** (சி.பத்மநாதன், மு.கு.நூ, பக்- 344-346)

என வருகின்றது. இந்த வாசகம் வீரன் கற்கால் திருநிலையாக வைத்தமை பற்றிக் குறிப்பிடுகின்றது. இச்சாசனம் கட்டுமானம் ஒன்றின் முகமண்டபத்தே வைக்கப்பட்டது. அது வேந்தன் ஒருவனுக்கு அருள் புரிந்தமைக்கான நன்றிக் கடன். அருள் புரிந்தவன் வென்றிமாலைகளைச் சூடிய வேல் வடிவானவன் எனக்குறிப்பிடுகின்றது. வெற்றிமாலைகளைச் சூடிய வேல்வடிவானவன் எனக்குறிப்பிடப்படும் கடவுள் வில்லூன்றி என்னும் தலத்திற் கோயிற் கொண்டுள்ள முருகக்கடவுளே ஆவார் என்பது கவனத்திற்குரியது.

செண்பகப் பெருமாள் யாழ்ப்பாண இராச்சியத்தை கைப்பற்றிய பின் நல்லூர் கந்தசுவாமி கோயிலைக் கட்டினான். அவன் யாழ்ப்பாணத்தை ஒரு தனி இராச்சியமாக, இந்து இராச்சியமாக ஆட்சிபுரிந்தான். அண்மையிற் கிடைத்த சில நாணயங்களின் மூலம் இதனை உறுதி செய்ய முடிகின்றது. அவன் கந்தசுவாமி கோயிலின் பெயரால் வெளியிட்டான் போல் தெரிகின்றது. ஆரியச்சக்கரவர்த்திகள் தங்கள் பூர்வீக தலமாகிய இராமேஸ்வரத்தைக் குறிக்கும் சேது என்னும் பெயரினையும் சைவசமய சின்னமாகிய நந்தியினையும் பொறித்து காசுகளை வெளியிட்டார்கள். (நேர்காணல், சி.பத்மநாதன், 12.08.2017)

செண்பகப்பெருமாள் இச்சின்னங்களைத் தவிர்த்து வேறு சின்னங்களையுடைய நாணயங்களை வெளியிட வேண்டி இருந்தது. அவற்றின் ஒரு புறத்தில் குமார வழிபாட்டுச் சின்னமாகிய மயிலும், மறுபுறத்தில் கோயிலின் அடையாளமான சிற்றுருவ வடிவத்தினையும், ஆறுமுகசுவாமி, கந்தசுவாமி என்பனவற்றின் முதல் எழுத்துக்களான ‘ஆ’,‘க’ என்பனவற்றில் ஒன்றும் பொறிக்கப்பட்டுள்ளன. (மேலது) பிற்காலங்களில் ஆட்சிபுரிந்த ஆரியச்சக்கரவர்த்திகள் நாணயங்களை வெளியிட்ட போது புராதனமான தங்கள் குலச்சின்னங்களுடன் சில சமயங்களில் மயிலின் உருவத்தையும் பொறித்தனர். (மேலது)

பதின்மூன்றாம் நூற்றாண்டு காலப்பகுதியில் கிழக்கிலங்கையில் பாண்டியர்களின் செல்வாக்கு சிறப்பு நிலையில் இருந்திருக்கின்றது. கிழக்கிலங்கையின் திருக்கோயில் சித்திரவேலாயுதர் கோயில் எப்பொழுது கட்டப்பட்டது என்பதற்கு தகுந்த சான்றுகள் இல்லை. கிடைத்துள்ள கல்வெட்டுச் சாசனங்களும் காலத்தால் பிற்பட்டவை. எனினும் கோயிலின் கட்டட அமைப்பைக் கொண்டு அது பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனலாம். கோயிலின் கர்ப்பக்கிரகத்துக்கு மேலுள்ள விமானம், தூண்கள், அரைத்தூண்கள் ஆகியவற்றிலே காணப்படும் போதிகைகளும் திட்டவட்டமாகப் பாண்டியர் கட்டடப் பாணியிலேயே அமைந்திருக்கின்றன. பதின்மூன்றாம் நூற்றாண்டு காலத்தில் கிழக்கிலங்கையில் முருக வழிபாடு பிரசித்தமுடைய வழிபாடாகக் காணப்பட்டிருக்கின்றது. (கா.இந்திரபாலா, 1920, பக்.37-38)

யாழ்ப்பாணத்தில் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கும் கி.பி. பதினேழாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், ஆட்சிபுரிந்த யாழ்ப்பாண தமிழரசர்கள் வெளியிட்ட நாணயங்கள் சிலவற்றில் முன்புறத்தில் மன்னனது உருவமும் பின்புறத்தில் நந்தி, மயில் உருவங்களும் பொறிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. (ப.புஷ்பரெட்ணம், 2000, ப.205) இதில் வரும் நந்தியின் உருவம் சிவனது ஊர்தியாகவும், மயில் முருகனது ஊர்தியாகவும் கொள்ள இடமுண்டு. அங்கு கண்டெடுக்கப்பட்ட வேறு சில நாணயங்களில் மயிலோடு முருகனது உருவமும் பொறிக்கப்பட்டுள்ளது. (மேலது, ப.203)

கி.பி பதினான்காம் நூற்றாண்டு காலப்பகுதியிலே வெளியிட்டதாக் கருதப்படும் நாணயங்களில் ‘கந்’,‘ஆ’ என்ற எழுத்துப் பொறிக்கப்பட்டுள்ளதாக ப.புஷ்பரட்ணம் கூறுகின்றார். (மேலது, பக். 208-212) இன்னுமொரு வகை நாணயங்களில் மயிலின்

வாயில் பாம்பு தொங்குகின்ற காட்சி உள்ளது. எனவே இவ்வகைச் சின்னங்களை முருகக் கடவுளுடன் தொடர்புபடுத்திக் கூறுவது பொருந்தும்.

யாழ்ப்பாணத்திற் சிறப்புற்று விளங்கும் முருகன் கோயில்களிற் தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோயிலும் ஒன்று. இக்கோயில் வரலாற்றினை கல்வெட்டுக்களிலோ நாணயங்களிலோ காணமுடியாது. இருப்பினும் ஐதிகக் கதைகளும், புராண வரலாறுகளும் இவ்விடத்தினை நிரப்புகின்றன. இக்கோயிலின் வரலாறு பற்றி அறியக் கூடிய தொல்பொருள் சின்னங்களில் அங்கு தேர் இழுப்பதற்குப் உபயோகிக்கப்படும் கயிறு மிகப்பழையானது எனக் கூறப்படுகின்றது. இதற்கு அங்கு நிலவுகின்ற மரபுவழிக் கதை ஒன்றும் உள்ளது. யாழ்ப்பாணத்தில் ஆகமம் சாராத வகையில் வழிபாடு இடம்பெறுகின்ற தலங்களில் செல்வச்சந்நிதியும் ஒன்று. மௌன பூசை, வள்ளிக்கிழங்குப் படையல் முதலியவை இக்கோயிலின் வழிபாட்டில் முக்கிய இடத்தினைப் பெறுகின்றன. மாவிட்டபுர கந்தசுவாமி கோயிலும் புவனேகபாகு காலத்தில் சிறப்புற்றிருந்ததாக யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது. (யாழ்ப்பாண வைபவமாலை, பாடல் 39) அத்துடன் மாவிட்டபுர கந்தசுவாமி கோயிலுடன் மாருதுப் புரவீகவல்லியின் கதையும் புனையப்பட்டுள்ளது. (மேலது)

இலங்கையிலே மத்திய காலப் பகுதியில் சிறப்புற்று விளங்கிய இராசதானிகளில் கோட்டை இராசதானிக்கு முக்கியத்துவம் உண்டு. மன்னர்கள் அரச சபையில் பௌத்த சமயத்திற்கு வழங்கியிருந்த முக்கியத்துவத்தினை சைவ சமயத்திற்கும் வழங்கியிருந்தனர். சைவ சமயம் சார்பான கோயில்கள் பல கட்டப்பட்டன. இக்கோயில்களில் முருகன் கோயில்கள் பலவும் அடங்கும்.

கி.பி பதினான்காம் நூற்றாண்டிற் கோட்டை இராசதானி கட்டப்பட்ட போது, கோட்டையின் காவலின் பொருட்டு அழகேஸ்வரன் என்னும் பிரதானியால் அதன் நான்கு மூலைகளிலும் நான்கு காவற்கோயில்கள் கட்டப்பட்டன. அவற்றில் ஒரு கோயில் சுப்பிரமணியருக்கானது. (C.S.Navaretnam, Ibid, P.33) கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டு காலப்பகுதியிற் கோட்டையை இராசதானியாகக் கொண்டு ஆட்சி நடைபெற்ற காலத்திற் கோட்டையிற் கந்தசுவாமி கோயில் கட்டப்பட்டதாக, கோகில சந்தேச, பரவி சந்தேச போன்ற சிங்கள தூது விடு இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகின்றது. (Ibid,P.185) இக்கோயிலில் உறைந்துள்ள முருகக் கடவுளை 'மகாசேனன்' என சலலீஹினி சந்தேச என்னும் சிங்கள இலக்கிய நூல் கூறுகின்றது. (Ibid,P.105)

இலங்கையிலே தமிழகப் பக்தி நெறியாளர்களால் பாடப்பெற்ற தலங்கள் மூன்று உள்ளன. அவற்றிலொன்று கதிர்காமம். பதினைந்தாம் நூற்றாண்டில் அருணகிரிநாதர் இத்தலத்தின் மீது பதினாறு பாடல்களைப் பாடியுள்ளார். இப்பாடல்கள் அவரது திருப்புகழ் என்னும் தோத்திரத் திரட்டில் உள்ளமை ஈண்டு நோக்கத்தக்கது. (திருப்புகழ், 639:07) கதிர்காமத்தை 'கதிரமலை' என்றும் 'கதிர்காம மூதூர்' (மேலது, 637:16) என்றும் அருணகிரியார் பாடியிருக்கின்றார். சிவபெருமானின் மகனான குமரன் வேடர் குலப் பெண்ணான வள்ளியின் மணாளனாகக் கோயில் கொண்டிருக்கின்றார் எனக் கூறும் அருணகிரிநாதர் கதிர்காமக் கடவுளை, தேவர்பெருமாள், (மேலது, 637:18) வீரப்பெருமாள்,(மேலது, 636:10) குமரப்பெருமாள், (மேலது, 636:06) அருள்கடல், (மேலது, 647:04) ஏழைக்கு இரங்கும் பெருமாள், (மேலது, 640:18) நீதிப்பெருமாள் (மேலது, 641:03) என்றெல்லாம் போற்றுகின்றார்.

**" மணிதரளம் வீசி**
**யணியரவி சூழ**

**மருவு கதிர்காமப்**
**பெருமாளே"** (மேலது, 636: 10-11)

அத்துடன்,

**“ இலகு சிலை வேடர் கொடியினதி பார**

**இருதனவி நோதப் பெருமாளே”** (மேலது, 636: 17-18)

என மாணிக்க கங்கையால் சூழப்பெற்ற கதிர்காமத்தை, வேடர்கள் பூசித்த கோயில் என்று பாடுகின்றார்.

எனவே கதிர்காமத் தலத்தினை தாய்த்தலமாகக் கொண்டு, இலங்கையின் ஏனைய பிராந்தியங்களில் முருக வழிபாடு தோற்றம் பெற்று இன்று பெருவளர்ச்சி கண்டுள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

இலங்கையிலே ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் காலத்தில் (கி.பி.1415 – கி.பி.1467) தோற்றம் பெற்ற சிங்களத் தூது இலக்கியங்களிலும் கோட்டை இராசதானியில் இருந்த முருகன் கோயில் பற்றிய குறிப்பொன்றினைக் காணமுடிகின்றது. (என்.கே.எஸ்.திருச்செல்வம், 2010, பக். 11-13) சலலிஹினி சந்தேஸ என்னும் தூது இலக்கியம் அதனை உறுதிப்படுத்தும் இலக்கிய ஆவணமாகக் கொள்ளத்தக்கது. இந்நூலில் கோட்டையில் இருந்த கந்தசுவாமி கோயிலைப் பற்றிய வருணனை மேல்வருமாறு கூறப்படுகின்றது.

**“அரண்மனைக்குத் தென்பாலானது கந்தசுவாமி கோயில்**

**அங்கு சேவற்கொடிகளும் வேறு பதாதைகளும் தெரிகின்றன**

**மணிகள் பதித்த தங்கமயமான கம்பங்களிற்**

**பொருந்திய அவை சூரிய கிரகணங்களைப் போல பிரகாசிக்கின்றன”** (மேலது)

இதையொத்த ஆறாம் விஜயபாகு காலத்திற்குரிய கந்தசுவாமி கோயில் ஒன்று பற்றிய குறிப்பொன்றும் கல்வெட்டுச்சாசனம் ஒன்றில் குறிப்பிடப்படுகின்றது. அவை பற்றி ஐரோப்பியர் கால முருக வழிபாடு என்னும் பகுதியில் நோக்கப்படுகின்றது.

**நிறைவாக**

தொகுத்துக் கூறுமிடத்து இலங்கையின் முருக வழிபாடு, தமிழகத்தில் முருக வழிபாடு பயில்நிலையில் இருந்த காலம் முதலாக இங்கும் வழக்கிலிருந்திருக்கின்றது என்பதனை அறியமுடிகின்றது. இலங்கையில் முருக வழிபாடு மன்னர்களினதும், தனவந்தர்களினதும் ஆதரவினாலும், பணியினாலும் சிறப்புற்றுள்ளது. மன்னர்களும் தனவந்தர்களும் செய்த இறை பணியினை அவர்களது காலத்தைய இலக்கியங்களும், கல்வெட்டுச் சாசனங்களும், நாணயங்களும் ஏனைய தொல்பொருட் சின்னங்களும் வெளிப்படுத்துகின்றன.

# துணைநூற் பட்டியல்

## மூல நூல்கள்


1. **கந்தசஷ்டிக் கவசம்,** 2011**,** தேவராய சுவாமிகள்,கலை இலக்கிய அவை, மண்டூர்.

2. **திருப்புகழ்,** 1986, அருணகிரிநாதர், வானதி பதிப்பகம், சென்னை.

3. **திருமந்திரம்,** 1976, சுப்பிரமணியபிள்ளை,பொன். (பதி.), திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை.

4. **திருமந்திரம்,** 1997, அருணைவடிவேல்,சி., ஞானசம்பந்தன் பதிப்பகம், மயிலாடுதுறை. (பொழிப்புரை)

5. **யாழ்ப்பாண வைபவமாலை,** 1953, சபாநாதன், குல.,(பதி.), சரஸ்வதி புத்தக சாலை, கொழும்பு.

6. **வையாபாடல்** 1980, நடராசா.சு.,செ(பதி.), கொழும்பு.


## துணை நூல்கள்

### தமிழ் நூல்கள்


1. இந்திரபாலா, கா., 1970, **இலங்கையில் திராவிடக் கட்டடக்கலை,** குமரன் அச்சகம், கொழும்பு.

2. கணபதிப்பிள்ளை, க., 2003, **இலங்கை வாழ் தமிழர் வரலாறு,** குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

3. கணபதிப்பிள்ளை, மு., 1965, **முருகன் - கதிர்காமம்,** அருள் நிலையம், சென்னை.

| | | | |
|---|---|---|---|
| 4. | கிருஸ்ணராசா, செ., | 2012, | **இலங்கைப் பண்பாட்டு பரிணாமத்தின் அடிப்படைகள்,** AB Creator & publishers, கொழும்பு. |
| 5. | சந்தனா நல்லலிங்கம், | 1994, | **கதிர்காமப் பிரபந்தங்கள்,** அலமு அச்சகம், சென்னை. |
| 6. | சபாநாதன், குல.,(பதி.), | 2007, | **கதிர்காமம்,** குமரன் புத்தக இல்லம், கொழும்பு-சென்னை. |
| 7. | சிற்றம்பலம், க., | 1993, | **யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு,** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |
| 8. | ---------------------------, | 1996, | **ஈழத்து இந்து சமயவரலாறு,** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம். |
| 9. | திருச்செல்வம்,என்.கே.எஸ்., | 2010, | **தென்னிலங்கையின் புராதன இந்துக் கோயில்கள் பாகம் - 01,** இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு. |
| 10. | பத்மநாதன்.சி.,(பதி.) | 1994, | **இலங்கையின் இந்துக் கோயில்கள்-01,** இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு. |
| 11. | ---------------------------, | 2000, | **இலங்கையில் இந்துக் கலாசாரம்,** இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு. |
| 12. | ---------------------------, | 2002, | **இலங்கைத் தமிழர் தேசவழமைகளும், சமூக வழமைகளும்,** |

குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

13. ---------------------------, 2003, **இலங்கையில் வன்னியர்,**

குமரன் புத்தக நிலையம், கொழும்பு- சென்னை.

14. ---------------------------, 2004, **ஈழத்து இலக்கியமும் வரலாறும்,**

குமரன் புத்தக நிலையம், கொழும்பு- சென்னை.

15. ---------------------------, 2006, **இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்,**

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

16. ---------------------------, 2013, **இலங்கைத் தமிழ் சாசனங்கள்- 02,** இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

17. புஸ்பரெட்ணம்,ப., 2000, **தொல்லியல் நோக்கில் இலங்கைத்** தமிழர் பண்பாடு,

குமரன் பதிப்பகம், சென்னை.

**ஆங்கில நூல்கள்**

1. Bopearachchi,o., 1999, **Ruhuna an Ancient civilization Revisted,** Archaeological Deparment, Colombo, Sri Lanka.

2. Navaratnam,C.S., 1964, **A Short History Of Hinduism In Ceylon,** Sri sanmuganatha Press, Jaffna.

3. Pathmanathan,S., 2006, **Hindu temples of Sri Lanka,**

**Kumaran book House, Colombo.**

4. Subbrayalu,Y., 1991, **Persional Names and Society(in tamil) History and Tamil Inscription**

**(unpublished seminar papers),**Tanjavur Tamil University.

## ஆய்வுக் கட்டுரைகள்

புஷ்பரட்ணம்,ப., 2002, **“ இலங்கைத் தமிழரின் பண்டைய நாணயங்கள் காட்டும் முருக வழிபாடு”,** பண்பாடு, இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

## மலர்கள்

இரண்டாவது இந்து மாநாட்டுச் சிறப்புமலர், 2003, இந்துக் கலாசார அலுவல்கள் திணைக்களம்,கொழும்பு.

## நேர்காணல்

சி.பத்மநாதன், வயது 80, தகைசார் பேராசிரியர், 20. பல்மேரா இடம், கொழும்பு - 03 (12.08.2017)

## களஆய்வு

ஆய்வாளர், பங்குபற்றுதல் அவதானம், இணுவில் கந்தசுவாமி கோயில் 22.03.2017